வாசிக்க: சங்கீதம் 71

***"தேவனே, என் இளமைமுதல் எனக்குக் கற்பித்து வந்தீர்; இனிவரும் நாட்களிலும் உமது வியத்தகு செயல்களை அறிவிப்பேன்" (சங் 71:17)***

தனது 85ஆம் வயதில் 45 ஆண்டுகளுக்குமுன் நடந்த ஒரு சம்பவத்தைக் குறிப்பிட்டு காலேப், "மோசே என்னை அனுப்பிய நாளில் எனக்கிருந்த அந்தப்பலம் இந்நாள்வரை எனக்கு இருக்கிறது; யுத்தத்திற்குப் போக்கும் வரத்துமாயிருக்கிறதற்கு அப்போது எனக்கிருந்த பலம் இப்போதும் எனக்கிருக்கிறது" என்றான் (யோசு 14:11). தனது 85ஆம் பிறந்தநாளன்று இவ்விதம் அறிக்கைசெய்தான் (வச 10இ). தனது பிறந்தநாள் பரிசாக அவன் மிருதுவான கேக் அல்ல, கடினமான மலைப் பகுதியைக் கேட்டான்! (வச 12). பாதகச் சிந்தையுள்ள பெரும்பான்மையினரை அவன் சேர மறுத்ததே இதற்குக் காரணம் (எண் 13:30-33). அளவுக்கு மீறி கவனமாயிருப்பது முதிர்வயதினரின் குணம்; இளைஞரோ துணிந்து எதையும் செய்துபார்ப்பார்கள். விசுவாசத்திற்குத் துணிச்சல் ஒரு தோழனாம்.

"நமது வாழ்நாளின் முதல் பாதியை மூத்த தலைமுறையினரைப் புரிந்துகொள்ள முயற்சிப்பதிலும், அடுத்த பாதியை இளந்தலைமுறையினரைப் புரிந்துகொள்ள முயற்சிப்பதிலும் செலவிடுகிறோம்" என்பது ஏர்ல் வில்சன் என்பவரின் கணிப்பு.

துவக்க 1970களில், ஆசீர்வாத இளைஞர் இயக்கம் உருவெடுத்துக்கொண்டிருந்த போது, முன்னோடி மிஷனரிப் பணிக்களங்களை நேரடியாய்ச் சென்று பார்த்துவர நமது மாணவர் குழுக்களை, கோடை விடுமுறையின்போது, காடுமலைகளுக்கு அனுப்பினோம். தொழுநோய் மருத்துவ நிபுணரான Dr. பால் பிராண்டின் (1914-2003) தாயார் பிராண்டு அம்மையார் (1879-1975) தனது கணவர் இறந்த பின்னரும் ஊழியம் செய்துகொண்டிருந்த கொல்லிமலைக்கு ஒரு குழு அனுப்பப்பட்டது. நடக்கக்கூட முடியாமல், ஆனால் உற்சாகம் குன்றாதிருந்த இந்த மூதாட்டியோடு நமது இளைஞர் செலவழித்த நேரம் அவர்களது வாழ்க்கையையே புரட்சிகரமாக்கிற்று. அவர்களில் சிலர் முழுநேர மிஷனரிகளாகவே மாறிவிட்டனர்.



இளைஞரோடு நேரம் செலவழிப்பது உங்களுக்கு மட்டுமல்ல, அவர்களுக்கும் பெருநன்மை பயக்கும். சில ஆண்டுகட்குமுன் வயதான பேராசிரியர் ஒருவர் நான் ஒரு மாலை ஆராதனையில் பேசி முடித்ததும் என்னை அழைத்து, "ஸ்டான்லி! கடவுள் உன்னைத் தமது கரத்தில் எடுத்திருப்பதை நினைத்து மகிழுகிறேன். எளிய வாழ்க்கையும் உயர்ந்த சிந்தனையுமே உனது இலட்சியமாயிருக்கட்டும்!" என்றார். சரியான சமயத்தில் இவ்வார்த்தைகள் இவ்விதம் சொல்லப்பட்டிராவிடில் ஒரு வேளை இன்று பொருளாதார ரீதியிலேயே செயல்படும் பெருவாரியான ஊழியங்களோடு நானும் வாரிக்கொண்டுபோகப்பட்டிருப்பேன். ஆப்பரேசன் மொபலைசேஷன் நிறுவனர் ஜார்ஜ் வெர்வர் அவர்களோடு செலவழித்த ஒரு மாலைப்பொழுதின் உரையாடல் சுய நியமனத் தலைமைக்கும் தெய்வீக நியமனத் தலைமைக்குமுள்ள வேறுபாட்டை நிதானிக்க எனக்கு மறக்க முடியாததோர் எச்சரிப்பாய் அமைந்தது. தீர்க்கதரிசி லியோனார்டு ரேவன்ஹில் (1907-1994) அவர்களோடு அவரது எளிய இல்லத்தில் செலவழித்த மாலைப்பொழுது எழுப்புதலுக்கான எனது தாகத்தை வெகுவாய்க் கூட்டிவிட்டது. பழுத்த தேவ மனிதர் பலர் என்னுள் இவ்விதம் பதித்துவிட்டவை ஏராளம்!

ஐயா, அம்மா, அங்கிள், ஆன்ட்டி! உங்கள் யாவருக்கும் இளைஞர் சார்பில் தோத்திரம்!